# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:105** **தேதி:-02.06.2016**

**JTO LICEமுடிவுகள் ஓரிரு நாட்களில் வெளிவரும் மற்றும் இதர செய்திகள்**

அன்பார்ந்த தோழர்களே,

பீகார் மாநிலம் பாட்னா மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் உத்தரவின் அடிப்படையில் 22.05.2016 அன்று நடைபெற இருந்த JTO LICE தேர்வு பீகார் மாநிலத்தில் நடைபெறவில்லை. மனுதாரர் வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்ட காரணத்தால், அங்கு உடனடியாக தேர்வினை நடத்த வேண்டுமென BSNL ஊழியர் சங்கம் வற்புறுத்தியது. 02.06.2016 அன்று நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் DIRECTOR(HR) மற்றும் GM(RECT) ஆகியோரை சந்தித்து பேசினார். நிர்வாக தரப்பில் 17.07.2016 அன்று பீகாரில் JTO LICE தேர்வு நடத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

BSNL ஊழியர் சங்கத்தின் தொடர் வற்புறுத்தல் காரணமாக தமிழகம் உள்ளிட்ட இதர மாநிலங்களில் 2013-14 ஆம் ஆண்டிற்கான காலிப்பணியிடங்களை நிரப்புவதற்காக 22.05.2016 அன்று நடைபெற்ற தேர்வின் முடிவுகளை ஓரிரு தினங்களில் வெளியிடுவதற்கான முயற்சிகளை நிர்வாகம் எடுத்து வருவதாக DIRECTOR(HR) மற்றும் GM(RECT) ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**புதிய பெயர் மாற்றம்:-** RM, TM, Sr.TOA மற்றும் TTA ஆகிய கேடர்களுக்கான நிர்வாகம் ஏற்றுக்கொண்ட புதிய பெயர்களை இன்னமும் ERPயில் INCORPORATE செய்யப்படவில்லை. இது தொடர்பாக GM(Restg) திரு A.M.குப்தா அவர்களை 02.06.2016 அன்று சந்தித்த BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் இந்த பணியினை உடனடியாக முடிக்க வேண்டும் என வலியுறுத்தியதுடன் ஒரு கடிதத்தையும் எழுதியுள்ளார்.

**FORUM எழுதியுள்ள கடிதங்கள்:-** BSNLன் சொத்துக்களை DOTயிடம் இருந்து BSNLக்கு மாற்றும் பணி, 15 ஆண்டுகள் கழிந்த பின்னரும் நடைபெறவில்லை. இது தொடர்பாக FORUMத்தின் CORE COMMITTEE எடுத்த முடிவின் அடிப்படையில் 02.06.2016 அன்று BSNL CMDக்கு FORUM சார்பாக ஒரு கடிதம் எழுதப்பட்டுள்ளது. சொத்துக்களின் உண்மையான பத்திரங்களை அனைத்து மாநில நிர்வாகங்களும் எடுக்க வேண்டும். இந்த பத்திரங்கள் இல்லாமல் சொத்துக்களை மாற்றுவது நடைபெற இயலாது என்பதால், அனைத்து மாநில சங்கங்களும், மாநில தலைமை பொது மேலாளர்களை சந்தித்து இந்த பணிகளை முடுக்கி விட வேண்டும் என FORUM கேட்டுக் கொண்டுள்ளது.

அதே போல விருப்ப ஓய்வு திட்டத்தினை எதிர்த்தும் FORUM சார்பாக BSNL CMDக்கு 01.06.2016 அன்று ஒரு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**